From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 203 /2021

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Proshkhan | Father/Husband Name | : Mohamed Adam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 25.08.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் மேலூரில் வசித்து வருகிறேன். வேன் ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1ஐ சம்பவத்தன்று பார்த்திருக்கிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. 2021ம் ஆண்டு 9ம் மாதம் ஒருநாள் மாலை சுமார் 06 மணியளவில் ஆர்.சி. பள்ளிக்கும் பெடரல் வங்கிக்கும் இடையே நான் இலை கடைக்கு சென்றுவிட்டு திரும்பும்போது 2 நபர்கள் நின்றுகொண்டிருந்தவர்களை என்னுடன் வந்த ஜாஹிர் என்பவர் விசாரித்தார். அதற்கு அவர்கள் இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் ரூ.800-ஐ பறித்து சென்றுவிட்டதாகவும், காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்வதாகவும் போலீசார் விசாரித்தால் சாட்சி சொல்லுமாறும் எங்களிடம் கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:**

போலீஸ் விசாரணையில் நானும் ஜாஹிரும் இலைக்கடைக்கு போய்விட்டு திரும்பி வந்தபோது வாதியிடம் சம்பவத்தை பற்றி விசாரித்ததாக நாங்கள் கூறியுள்ளோமா என்றால் இல்லை. ஆனால் சம்பவ இடத்தில் நாங்கள் நின்றோம் என்று கூறியுள்ளோம். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நின்றுகொண்டிருந்த 2 நபர்கள் எங்களிடம் போலீசார் விசாரித்தால் அவர்களிடமிருந்து 2 நபர்ள் பணத்தை பறித்துக்கொண்டு சென்றதாகவும் அதற்காக அவர்களுக்கு ஆதரவாக நாங்கள் சாட்சியமளிக்கவேண்டும் என்று என்னையும் ஜாஹிரையும் கேட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவ தேதி மற்றும் நேரத்தை போலீசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.